RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in

DAILY EVENING　　மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை　மலர்-5　இதழ்- 241　செப்டம்பர் 05, 2026 சனிக்கிழமை　malaithanthi2020@gmail.com　4 பக்கங்கள்　விலை ரூ. 5

# கட்டடங்களில் தீ தடுப்பு மற்றும் பாதுகாப்பு வசதிகளுக்கான சட்ட திருத்த மசோதா

## முதல்வர் விஜய் குறிப்பிட்ட காரணங்கள்

சென்னை: செப்.5-

தொழில்துறை, பெட்ரோலியம், வெடிபொருள் சட்டத்தின் கீழ் வரும் கட்டடங்களில் தீ தடுப்பு மற்றும் பாதுகாப்பு வசதிகள் கட்டாயம் ஏற்படுத்த வேண்டும் என்று சட்டப்பேரவையில் முதலமைச்சர் விஜய் சட்ட திருத்த மசோதாவை தாக்கல் செய்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் விஜய், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான மசோதா ஒன்றை அறிமுகம் செய்தார். அதில், "இந்திய தர நிர்ணய நிறுவனம் கீழ் வரும் நுகர்வோர் விவகாரங்கள் துறை, கடந்த ஏப்ரல் 30 அன்று அரசிதழ் ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிவிப்பின்படி, இந்திய தேசிய கட்டடக் குறியீடு 2016-ஐ திரும்பப் பெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, 2026-ஆம் ஆண்டுக்கான வணிக சீர்திருத்த செயல்திட்டத்தின் கீழ், கட்டுமான அனுமதி மற்றும் கட்டட ஒழுங்குமுறைகள் தொடர்பான சீர்திருத்தங்களின் அடிப்படையில் சில முக்கிய பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, கட்டட சட்டங்களில் இருந்து தேசிய கட்டட குறியீடு தொடர்பான குறிப்புகளை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக தாராளமயமாக்கப்பட்ட மற்றும் நவீன தரநிலைகளை புகுத்தி, தீயணைப்பு மற்றும் கட்டட விதிமுறைகளை நவீனப்படுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த வணிக சீர்திருத்த செயல் திட்டத்தின் பரிந்துரைகளை அரசு கவனமாக பரிசீலித்து, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சட்டத்தில் தகுந்த திருத்தங்களை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. இந்த முடிவை நடைமுறைப்படுத்துவதற்காக



தற்போது இந்த சட்ட மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன்மூலம் மாநிலத்தின் கட்டட மற்றும் தீயணைப்பு விதிமுறைகள் நவீனப்படுத்தப்பட்டு, புதிய தரநிலைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட உள்ளன.

அதன்படி, கட்டடங்களின் உரிமையாளர்கள் அல்லது அங்கு வசிப்பவர்கள், இந்த சட்டத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள கட்டடங்களில் தீ தடுப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டாகவோ பொறுப்பு வகிக்கும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள், இந்த சட்டத்தின் விதிகளுக்கும், அதன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கும் உட்பட்டு பாதுகாப்பு வசதிகளைச் செய்துதர வேண்டும். குறிப்பாக, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019-ன் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ள தீ தடுப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை அவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

மேலும், எண்ணெய் தொழில் பாதுகாப்பு இயக்குநரகத்தின் வழிகாட்டுதல்கள் படி, 1934-ஆம் ஆண்டு பெட்ரோலியம் சட்டம் மற்றும் அதன் கீழ் உள்ள விதிகள், 1884-ஆம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் மற்றும் அதன் கீழ் உள்ள விதிகளின்படி பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இவை தவிர, அரசு அல்லது தொடர்புடைய பிற அதிகார அமைப்புகள் அவ்வப்போது வெளியிடும் வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறையில் உள்ள பிற சட்டங்களின் படியும் பாதுகாப்பு வசதிகளை செய்துதருவது உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களின் கடமையாகும்.

இந்த விதிமுறைகளை முறையாகப் பின்பற்றி, கட்டடங்களில் தேவையான அனைத்து பாதுகாப்பு அம்சங்களையும் உறுதிசெய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த சட்ட விதிகளின்படி பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் சட்டப்பூர்வமான பொறுப்பாகும்" என முதலமைச்சர் விஜய் தாக்கல் செய்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேட்டூர் அணைக்கு குறைந்த நீர்வரத்து.!! விவசாயிகள் கவலை

மேட்டூர், செப்.05-

சமீபத்தில் காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்த தொடர் மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கான நீர்வரத்து கடந்த சில தினங்களாக அதிகரித்து இருந்தது. இந்த நிலையில் தற்போது மேட்டூர் அணைக்கான நீர்வரத்து குறைந்துள்ளது.

இதனால் அணையின் நீர்மட்டமும் குறைய வாய்ப்புள்ளதால், குறுவை சாகுபடி செய்ய தங்களுக்கு தேவையான தண்ணீர் முழுமையாக கிடைக்குமா என டெல்டா விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு இன்று காலை 8 மணி நிலவரப்படி 8,041 கனஅடியிலிருந்து, 7,790 கன அடியாக குறைந்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 92.16 அடியாக உயர்ந்த நிலையில், தற்போது டெல்டா பாசனத்திற்காக அணையில் இருந்து 7,000 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. இதனிடையே அணையிலிருந்து 45 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளதால் முழு சாகுபடிக்குப் போதுமானதாக இருக்காது என விவசாயிகள் ஏற்கனவே கவலை அடைந்து உள்ளனர். இந்த சூழலில் அடுத்தடுத்த நாட்களில் மேட்டூர் அணைக்கான நீர்வரத்து குறைந்துள்ளதால் விவசாயிகள் மத்தியில் கவலை அதிகரித்து உள்ளது.

## மாசி மகாமக விழா ஏற்பாடுகள்: செப்.10 கும்பகோணத்தில் அறநிலையத்துறை அமைச்சர் ஆய்வு

கும்பகோணம், செப்.05-

“மாசி மகாமகத்தை ஒட்டி கும்பகோணத்தில் அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் வரும் செப்.10-ம் தேதி ஆய்வு மேற்கொள்ள உள்ளார்” என வேளாண் அமைச்சர் வினோத் தெரிவித்தார்.



கும்பகோணத்தில் உள்ள வாய்க்கால்களில் பல ஆண்டுகளாக தூர்வாரும் பணி நடைபெற்று வருகிறது. அந்த வாய்க்கால்களில் காவிரி நீர் செல்ல ஏதுவாக கும்பகோணம் கொட்டையூரிலிருந்து மேலக்காவேரி வரை 2.50 கி.மீ. தூரம் மண்டி உள்ள காட்டாமணி மற்றும் செடி கொடிகளை பொக்லீன் இயந்திரம் மூலம் அகற்றும் பணி இன்று நடைபெற்றது.

இந்த பணியினை வேளாண்மை துறை அமைச்சர் வினோத் கொடியசைத்து வைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், நீர்வளத்துறை உதவி செயற் பொறியாளர் முத்துமணி, உதவி பொறியாளர் கார்த்திகேயன், தவெக மாவட்ட பொருளாளர் விஜய சந்திரன், மாநகரச் செயலாளர் முருகானந்தம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இது தொடர்பாக வேளாண்மை துறை அமைச்சர் வினோத் கூறுகையில், “கும்பகோணம் காவிரி ஆற்றில் நடைபெற்று வரும் பணி, நீர் வருவதற்குள் முடிக்கப்படும். தமிழக முதல்வர் விஜய், கல்லணை காவிரி ஆற்று நீரை நேரில் வந்து திறப்பது தொடர்பாக கட்சித் தலைமையில் இருந்து அறிவிப்பு வெளியாகும்.

இப்போது கும்பகோணம் வாய்க்காலில் தூர் வாரும் பணி நடைபெற்று வருகிறது. இரண்டு நாட்களில் குடியிருப்புகளில் இருந்து வாய்க்காலில் விடும் கழிவுநீர் அடைக்கப்படும். அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.” என்றார்.

தொடர்ந்து அமைச்சரிடம், கும்பகோணம் ஆணையர் ‘கங்கையிலேயே பிரச்சினை இருக்கு, கும்பகோணம் பற்றி ஏன் இவ்வளவு கவலைப்படுகிறீர்கள்?’ என தாங்கள் ஆய்வுக்கு செல்லும்போது சொல்லியதாக கூறப்படுகிறதே எனக் கேட்டதற்கு? “இதுவரைக்கும் அப்படி ஒரு தகவல் எதுவும் சொல்லவில்லை. அப்படியே கங்கையில் தூர்வாராவிட்டால் என்ன, நம் ஊரில் நாம்தானே தூர்வாரி ஆக வேண்டும், இது தமிழ்நாடு.” என்றார்.

தொடர்ந்து, “கும்பகோணத்தில் மாசி மகாமக விழா நடைபெறுவது குறித்து வரும் செப்.10-ம் தேதி அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் கும்பகோணத்தில் ஆய்வு மேற்கொண்டு, இந்த விழா தொடர்புடைய கோயில்களில் நேரில் ஆய்வு மேற்கொள்ள உள்ளார். எனினும் 2028-ல் நடைபெற உள்ள மாசி மகாமக விழா மிகவும் சிறப்பாக நடைபெறும்” என்று அமைச்சர் வினோத் கூறினார்.

## முன்னாள் அமைச்சரின் மகன்களிடையே சொத்து தகராறு - தம்பியை கொலைசெய்த அண்ணன் காவல்நிலையத்தில் சரண்

புதுக்கோட்டை, செப்.05-

அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் மறைந்த வெங்கடாசலத்தின் மகன்களிடையே ஏற்பட்ட சொத்து தகராறில் ஒரு மகன் மற்றொரு மகனை கொலை செய்துவிட்டு காவல்நிலையத்தில் சரணடைந்தார்.





புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு பகுதியைச் சேர்ந்தவர் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரான மறைந்த வெங்கடாசலம். இவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவிக்கு ராஜபாண்டி என்ற ஒரு மகனும், இரண்டு மகள்களும் உள்ளனர். இரண்டாவது மனைவிக்கு ராஜராஜன் என்ற மகன் உள்ளிட்ட இரண்டு மகன்கள் உள்ளனர்.

ராஜபாண்டி அ.தி.மு.க. அம்மா பேரவை மாநில இணைச் செயலாளராக உள்ள நிலையில், அவரது சகோதரரான ராஜராஜனோடு அவருக்கு சொத்து தகராறு இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் கடந்த ஓராண்டுக்கு முன்பு வடகாடு பகுதியில் ராஜபாண்டியின் வீட்டிற்கு அருகாமையில் உள்ள ஓட்டு வீட்டை ராஜராஜனுக்கு சொத்து பிரித்து கொடுத்துள்ளனர்.

ஆனால் வீட்டை பிரித்துக் கொடுத்தும், அந்த வீட்டிற்கு ராஜராஜனை வரவிடாமல், ராஜபாண்டி அந்த ஓட்டு வீட்டை பூட்டி வைத்ததாக கூறப்படுகிறது. இதுக்குறித்து புதுக்கோட்டை மாவட்ட எஸ்.பி அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ராஜராஜன் மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால், ராஜராஜனின் மனைவி மற்றும் குழந்தைகள், அவரது தாயார் வீட்டில் வசித்து வந்ததாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் இந்த சொத்துப் பிரச்சினை தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இதனைத் தொடர்ந்து, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு ராஜராஜனுக்கு வழங்கிய சொத்தான வீட்டை அவரிடம் ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிட்டதை தொடர்ந்து, கடந்த சில தினங்களுக்கு முன்பு ராஜபாண்டியிடமிருந்து சாவியை வாங்கி காவல்துறையினர் ராஜராஜனிடம் ஒப்படைத்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், சாவியை வாங்கிய ராஜராஜன் அந்த ஓட்டு வீட்டிற்கு சென்று தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார். அப்போது அங்கு வந்த ராஜபாண்டி, அந்த வீட்டை தனது வீடு என்று கூறியதோடு, “எனது வீட்டில் என்ன செய்கிறாய்?” என்று கேள்வியெழுப்பி ராஜராஜனை கத்தியால் குத்த முயன்றதாக தெரிகிறது.

இதில் அச்சமடைந்த ராஜராஜன் அங்கிருந்து ஓடிய நிலையில், அவரை விடாமல் ராஜபாண்டி விரட்டியுள்ளார். அப்போது ராஜராஜன் அந்த பகுதியிலுள்ள ராமலிங்கம் என்பவரது வீட்டிற்குள் சென்று ஒளிந்துகொண்ட நிலையில், அந்த வீட்டிற்குள் சென்ற ராஜபாண்டி, ராஜராஜனை கத்தியால் குத்தியதோடு, அந்த வீட்டிலிருந்த சிலிண்டரை எடுத்து ராஜராஜன் தலையில் போட்டுள்ளார்.

இதனால், ரத்த வெள்ளத்தில் சரிந்த ராஜராஜன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார். பின்னர் அந்த வீட்டிலிருந்த மூதாட்டி இதனை பார்த்து சத்தம் போட்டதை தொடர்ந்து, அங்கிருந்து ராஜபாண்டி அவரது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார். இதையடுத்து, இந்த சம்பவம் தொடர்பாக தகவலறிந்து வந்த ராஜராஜனின் குடும்பத்தினர் மற்றும் அவரது உறவினர்கள் வடகாடு பகுதியில் புதுக்கோட்டை - பட்டுக்கோட்டை சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு கொலையாளியை கைதுசெய்ய வேண்டுமென வலியுறுத்தினர்.

இந்நிலையில் ராஜராஜனை கொலைசெய்த அவரது சகோதரர் ராஜபாண்டி புதுக்கோட்டையில் அவரது வழக்கறிஞரோடு சென்று காவல்நிலையத்தில் சரணடைந்தார். இதனைத் தொடர்ந்து, ராஜராஜனின் உறவினர்கள் போராட்டத்தை கைவிட்டு, ராஜபாண்டியின் குடும்பத்தினரையும் கைதுசெய்ய வேண்டும், அதுவரை ராஜராஜனின் உடலை சம்பவ இடத்திலிருந்து எடுக்க விடமாட்டோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்திய நிலையில் உடலை வாங்கிச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக வடகாடு காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ராஜபாண்டியின் மனைவி சுவிதா முன்னாள் ஒன்றிய கவுன்சிலராக இருந்த நிலையில், தற்பொழுது அ.தி.மு.க. மாவட்ட இணை செயலாளராக பொறுப்பில் உள்ளது குறிப்பிடத்தக்கது

## ஒட்டன்சத்திரத்தில் வீட்டை சேதப்படுத்திய யானை: உயிர் தப்பிய தம்பதி

பழநி, செப்.05-

ஒட்டன்சத்திரம் அருகே காட்டு யானை வீட்டை சேதப்படுத்தியது. அங்கு வசித்த தம்பதி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.



ஒட்டன்சத்திரம் வனப் பகுதியையொட்டி அமைந் துள்ள பரப்பலாறு அணை, பெத்தேல்புரம், வடகாடு, புலிக் குத்திக்காடு ஆகிய மலைக் கிராமங்களில் யானைகள் நடமாட்டம் அதிகம் உள்ளது.

இந்த யானைகள் அடிக்கடி உணவு மற்றும் தண்ணீருக்காக பரப்பலாறு அணை பகுதி, வனப்பகுதியையொட்டி உள்ள விளைநிலங்களுக்குள் நுழைவது வாடிக்கையாக உள்ளது. கடந்த சில நாட்களாக மலைக்கிராமங்களில் ஒற்றை யானை நடமாட்டம் உள்ளது.

நேற்று முன்தினம் இரவு பெத்தேல்புரம் கிராமத்தில் உள்ள குடியிருப்பு பகுதியில் உணவு தேடி நுழைந்த ஒற்றை யானை, குபேந்திரன் - ஜீவரத்தினம் தம்பதியின் வீட்டின் மேற்கூரையை உடைத்து சேதப்படுத்தியது.

சத்தம் கேட்டு வெளியே வந்த தம்பதி, வீட்டு வாசலில் யானை நிற்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். யானையை பார்த்து கூச்சலிட்டனர். சிறிது நேரத்தில் யானை அங்கிருந்து சென்றுவிட்டது.

தகவலறிந்து நேற்று காலை அங்கு சென்ற ஒட்டன்சத்திரம் வனத்துறையினர் சேதமடைந்த வீட்டை ஆய்வு செய்தனர். குடியிருப்பு பகுதி அருகே சுற்றித் திரியும் யானையை தொடர்ந்து கண்காணித்து விரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்

# ‘அரசியல் பேச வேண்டாம்’ - ராமதாஸ் வீட்டின் முன்பு வைக்கப்பட்டுள்ள பேனர்




விழுப்புரம்: செப்.5-

தைலாபுரத்தில் உள்ள பாமக நிறுவனர் ராமதாஸ் தோட்ட இல்லத்தின் நுழைவாயிலில், ’அரசியல் பேச வேண்டாம்’ என்ற வாசகத்துடன் கூடிய பேனர் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு டாக்டர் ராமதாஸ், தான் அரசியலில் இருந்து விலகுவதாக முறைப்படி அறிவித்தார். "இனி அரசியலைப் பேசமாட்டேன், அரசியலுக்கு வழிகாட்டவும் மாட்டேன்" என்று அவர் தெரிவித்திருந்தார். இந்நிலையில், பாமக மற்றும் வன்னியர் சங்க நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் தினமும் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை தைலாபுரம் இல்லத்தில் அவரை சந்தித்து வருகின்றனர்.

இவ்வாறு அவரை சந்திக்க வரும் சிலர், மீண்டும் அரசியல் தொடர்பான விவகாரங்களைப் பேச முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது. இதனால், அவரது உடல்நிலை மற்றும் அரசியல் துறவற முடிவைக் கருத்தில் கொண்டு, "அரசியல் பேச வேண்டாம்" என்ற அன்பான அறிவுறுத்தலுடன் இந்த பேனர் வைக்கப்பட்டுள்ளது.

’அரசியல் பேச வேண்டாம்’

அந்த அறிவிப்புப் பலகையில், "அரசியல் துறவறம்" என்ற தலைப்பின் கீழ், "சமூகநீதிக்காகப் போராடிய தமிழினப் போராளி மருத்துவர் அய்யா, அரசியல் துறவறம் மேற்கொண்டுள்ளதால், தைலாபுரம் தோட்டத்தில் அவரை சந்திக்க வரும் பார்வையாளர்கள் தயவுசெய்து அரசியல் பேச வேண்டாம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் பேச வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும், பாமக மற்றும் வன்னியர் சங்க நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்டோர் தொடர்ந்து டாக்டர் ராமதாஸை சந்தித்து வருகின்றனர். அவர்களில் பலர் தங்களது குடும்ப சுபநிகழ்ச்சிகளுக்கான அழைப்பிதழ்கள், குறிப்பாக திருமண அழைப்பிதழ்களை வழங்குவதற்காகவும், டாக்டர் ராமதாஸிடம் ஆசி பெறுவதற்காகவும் தைலாபுரம் தோட்டத்திற்கு வருவதாகக் கூறப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு டாக்டர் ராமதாஸுக்கும், அவரது மகன் அன்புமணி ராமதாஸுக்கும் இடையே கட்சி விவகாரங்கள் தொடர்பாக கருத்து வேறுபாடுகளும் மோதல்களும் ஏற்பட்டதாக செய்திகள் வெளியாகின. பின்னர் ஜூன் மாதத்தில் அன்புமணி ராமதாஸ் தனது குடும்பத்தினருடன் தைலாபுரம் சென்று, தந்தை ராமதாஸை சந்தித்து ஆசி பெற்றார்.

அரசியலில் இருந்து விலகிய ராமதாஸ்

அப்போது ராமதாஸ் நெகிழ்ச்சியடைந்து தனது மகனை கட்டிப்பிடித்து கண்ணீர் விட்டதாகவும், அதன் பின்னர் இருவருக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின. இந்த குடும்ப மற்றும் அரசியல் நகர்வுகளுக்குப் பிறகே ராமதாஸ் தான் அரசியலில் இருந்து விலகும் முடிவை எடுத்தார் என கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து ராமதாஸை சந்திக்க விரும்பும் பொதுமக்கள் மற்றும் தொண்டர்களுக்கு தற்போது குறிப்பிட்ட நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தினமும் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை இரண்டு மணி நேரம் மட்டுமே அவரை சந்திக்க அனுமதி வழங்கப்படுகிறது. ஆரம்பத்தில் காலை மற்றும் மாலை என இரு வேளைகளிலும் சந்திப்பு நடைபெறும் வகையில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அவரது முழு ஓய்வைக் கருத்தில் கொண்டு, சந்திப்பு நேரம் இரண்டு மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பேனர் பின்னணி அரசியல் காரணம்?

இதனிடையே, தைலாபுரம் தோட்டத்தில் இந்த பேனர் வைக்கப்பட்டதற்குப் பின்னால் முக்கியமான காரணம் இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. கடந்த சில நாட்களாக தைலாபுரம் தோட்டத்தில் தங்கியிருந்த சில பாமக முக்கிய நிர்வாகிகள், கட்சியின் தற்போதைய நிலவரம் மற்றும் சில உட்கட்சிப் பூசல்கள் தொடர்பான விவகாரங்களை டாக்டர் ராமதாஸின் கவனத்திற்கு கொண்டு சென்றதாகக் கூறப்படுகிறது.

இதனால் தேவையற்ற சலசலப்பு ஏற்பட்டதாகவும், இதுபோன்ற அரசியல் விவாதங்களைத் தவிர்க்கும் வகையிலேயே இந்த அறிவிப்பு பேனர் அவசரமாக வைக்கப்பட்டதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. எனினும், இதற்கான அதிகாரப்பூர்வ காரணம் இதுவரை வெளிப்படையாக தெரிவிக்கப்படவில்லை.

மேலும் பாமகவின் அரசியல் நகர்வுகள் மற்றும் முடிவுகளை எடுப்பதற்கான முழு சுதந்திரமும், அதிகாரமும் இனி அன்புமணி ராமதாஸுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனை தொண்டர்களுக்கு மறைமுகமாக உணர்த்தும் வகையிலேயே இந்த அதிகாரப்பூர்வ பேனர் வைக்கப்பட்டுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இதனிடையே கடந்த செப்டம்பர் 1-ஆம் தேதி அரசியல் ஆலோசனை வழங்குவார் என்ற எதிர்பார்ப்பில் ராமதாஸை சந்திக்க பாமக தொண்டர்கள் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்தனர். அவர்கள் நுழைவாயிலில் வைக்கப்பட்டிருந்த "அரசியல் பேச வேண்டாம்" என்ற அறிவிப்பு பேனரைப் பார்த்த சிலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

# திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் விதிகளை மீறி வாகனங்களுக்கு கூடுதல் கட்டணம் வசூல் அமைச்சர் தொகுதியில் கட்டணக் கொள்ளை என பக்தர்கள் புலம்பல்

மதுரை, செப்.05-

திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் அரசு நிர்ணய கட்டணத்தை மீறி வாகனங்கள் நிறுத்துவதற்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதனால் அமைச்சர் தொகுதியிலேயே கட்டணக்கொள்ளை நடப்பதாக பக்தர்கள் புகார் தெரிவித்தனர்.

முருகப் பெருமானின் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு வரும் வாகனங்களை நிறுத்த சரவணப்பொய்கை, ஜிஎஸ்டி சாலையிலுள்ள 2 இடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமை ஏலம் விடப்பட்டது.

வாகனங்கள் நிறுத்துமிடத்துக்கு கோயில் நிர்வாகம் சார்பில் இரண்டு சக்கர வாகனம் ஒன்றுக்கு ரூ.10, கார் ஆட்டோ வாகனம் ஒன்றுக்கு ரூ.30, மினி பஸ், வேன் ஒன்றுக்கு ரூ.50, பஸ், லாரி ஒன்றுக்கு ரூ.100 கட்டணம் வசூலிக்க வேண்டும் என அறிவிப்பு பலகை வைக்கப்பட்டது.

2026 ஜூலை 1 முதல் 2027 ஜூன் 30 வரை கட்டணம் வசூலிக்க அனுமதி அளிக்கப்பட்டது. இதில் ஏலம் எடுத்த ஒப்பந்ததாரர்கள், அரசு நிர்ணய கட்டணத்தை மீறி 2 மடங்கு கட்டணம் வசூலிப்பதாக வாகனங்களில் வரும் பக்தர்கள் புலம்புகின்றனர்.

இதுகுறித்து பக்தர்கள் கூறுகையில், தவெக ஆட்சி அமைந்த பின்பு இந்து சமய அறநிலையத் துறை கோயில்களில் நிகழும் கட்டணக் கொள்ளைகளை முறைப்படுத்த அமைச்சர் ரமேஷ், விலைப்பட்டியலை வெளிப்படையாக அறிவிப்புப் பலகையாக வைக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

அதன்படி திருப்பரங்குன்றம் கோயிலில் வாகனங்களின் கட்டண வசூலுக்கு கோயில் நிர்வாகம் சார்பில் அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது. அதனை மூடி மறைத்துள்ள ஒப்பந்ததாரர்கள் இருமடங்கு கட்டணம் வசூலிக்கின்றனர்.

தவெக ஆட்சிக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தும் வகையில் ஏலம் எடுத்த திமுகவைச் சேர்ந்த ஏலதாரர்கள் செயல்படுகின்றனர்.

தவெக ஆட்சியில் ஊழல், லஞ்சம், முறைகேடுகள், கட்டணக்கொள்ளைகள் தடுக்கப்படும் என பேசும் அமைச்சர் நிர்மல்குமாரின் தொகுதியிலேயே கட்டணக் கொள்ளை அரங்கேறுகிறது.

திருப்பரங்குன்றத்துக்குள் நுழைந்தாலே கட்டணம் வசூலிக்கின்றனர். அதனையும் தடுத்து நிறுத்த அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

இதுகுறித்து கோயில் துணை ஆணையர் செல்வி கூறுகையில், அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதலாக வசூலித்ததாக புகார் வந்ததால் ஒப்பந்ததாரர்களிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் கொடுத்துள்ளோம்.

இது தொடர்பாக கோயில் நிர்வாகம் சார்பில் அறிவிப்பு பலகை வைத்துள்ளோம். மீண்டும் புகார்கள் வந்தால் ஏலத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்

# எடப்பாடி பழனிசாமி தோட்டத்தில் மின் மோட்டார் வயர்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக போலீஸ் விசாரணை



சேலம், செப்.05-

எடப்பாடி பழனிசாமி தோட்டத்தில் மின் மோட்டார் வயர்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக போலீஸ் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சேலம் மாவட்டம் எடப்பாடி அருகே அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் அவருடைய சகோதரர் கோவிந்தராஜனுக்கு சொந்தமான தோட்டத்தில் மின் மோட்டார் வயர்களை மர்ம நபர்கள் வெட்டி திருடி சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. எடப்பாடிக்கு அருகிலுள்ள சிலுவம்பாளையத்தில் எடப்பாடி பழனிசாமி மற்றும் அவருடைய சகோதரருக்குச் சொந்தமான சுமார் 7 ஏக்கர் தோப்பு உள்ளது. அங்குள்ள ஆழ்துளைக் கிணற்றில் இருந்து விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த 1-ம் தேதி ஆழ்துளைக் கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த மின்மோட்டார் வயர்களை, அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் வெட்டித் திருடிச் சென்றுள்ளனர். இது குறித்து எடப்பாடி பழனிசாமியின் சகோதரர் கோவிந்தராஜ், பூலாம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். அதன் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த காவல்துறையினர், திருட்டில் ஈடுபட்ட மர்ம நபர்களைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

இந்நிலையில், இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து நேற்று நடந்த சட்டமன்றக் கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேசினார். மேலும், இச்சம்பவம் தொடர்பான புகைப்படங்கள் உள்ளிட்ட ஆதாரங்களையும் சட்டமன்றத்தில் அவர் சுட்டிக்காட்டினார்.

# இரவு ரோந்து பணியில் இருந்த காவலரை தாக்கிய வடமாநில இளைஞர்கள் மூன்று பேர் கைது




கரூர்: செப்.5-

தென்னிலை அருகே ரோந்து பணியில் ஈடுபட்ட காவலர் மீது தாக்குதல் நடத்திய மூன்று வட மாநில தொழிலாளர்களை கைது செய்து காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

நடந்து முடிந்த சட்டமன்ற பொது தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைத்த சில நாட்களில் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் அதிகம் கூடும் பேருந்து நிலையம், கோயில் வளாகம், பள்ளி வளாகம் அருகே உள்ள 717 மதுக்கடைகளை மூட உத்தரவிட்டது.

இதில் கரூர் மாவட்டத்தை உள்ளடக்கிய திருச்சி மண்டலத்தில் மட்டும் 84 மது கடைகள் மூடப்பட்டன. இருந்தபோதும், தமிழ்நாடு அரசு நடத்தும் அரசு மதுபான கடைகளில் விற்பனை மட்டும் சரிவடையவில்லை. இதற்கு முக்கிய காரணம் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை கடந்தும், கள்ள சந்தையில் மது விற்பனை நடைபெற்று வருவதால், அரசின் மதுவிற்பனை வருவாய் சரிவடைவதில்லை என சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

தினசரி சட்ட ஒழுங்கை பராமரிக்கும் காவல்துறை இரவு நேரத்தில் ரோந்து பணியில் ஈடுபடும்போது, இரவு 10 மணிக்கு மேல் அரசு மதுபான கடைகளில் விற்பனைகள் நடைபெறுகிறதா, கள்ள சந்தையில் மது விற்பனை நடைபெறுகிறா என்பது குறித்து தீவிர கண்காணிப்பையும் மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் நேற்றிரவு (செப்டம்பர் 3) சுமார் 10.30 மணியளவில், கரூர் மாவட்டம் தென்னிலை காவல் நிலையத்தில் பணியாற்றி வரும் காவலர் கணேசன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கந்தசாமி மேற்பார்வையில் அரசு மதுபானக் கடை அருகே ரோந்து மற்றும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது, அப்பகுதியில் வடமாநிலத்தைச் சேர்ந்த புலம்பெயர்ந்த மூன்று இளைஞர்கள் ஒன்றாக அமர்ந்து, மது அருந்திக் கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. இதனை கண்ட காவலர் கணேசன், அங்கு மது அருந்தியது குறித்து அவர்களிடம் விசாரித்ததாக தெரிகிறது. இதனால் ஆத்திரமடைந்த 3 பேரும் சேர்ந்து, காவலர் கணேசனை கடுமையாக தாக்கியதாக கூறப்படுகிறது.

பின்னர், அந்த 3 பேரும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த காவலர் கணேசன் அளித்த தகவலின் பேரில், தென்னிலை மற்றும் க.பரமத்தி காவல்துறையினர், காவலர் கணேசனை கரூர் காந்திகிராமம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

மேலும், இரவு ரோந்து பணியில் இருந்த காவலரை தாக்கிவிட்டு தப்பியோடிய 3 வடமாநில இளைஞர்களையும் அடையாளம் கண்டுபிடித்து கைது செய்ய காவல்துறையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், தென்னிலை காவல் ஆய்வாளர் சுகன்யா தலைமையிலான காவல்துறையினர், தென்னிலை அருகாமையில் உள்ள நிறுவனங்களில் திடீர் தேடுதல் மேற்கொண்டனர்.

அப்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், குடக்கில் நாயக் (வயது 27), சகாதேவ் பாரீக் (வயது 26), ரவிந்தீர கட்டய்யா (வயது 22) என்ற மூன்று வட மாநில இளைஞர்களை, தென்னிலை காவல் நிலையத்துக்கு அழைத்து வந்தனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மது போதையில் காவலர் கணேசனைத் தாக்கியதை அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, அரசு ஊழியரை மது போதையில் தாக்கியது, அரசு ஊழியரை பணி செய்யவிடாமல் தடுத்தது, தகாத வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுத்தது உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்த காவல்துறையினர் கைது செய்தவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பள்ளிக்கரணை சதுப்புநில எல்லைகளை உடனடியாக வரையறுக்க வேண்டும்” - அன்புமணி கோரிக்கை

சென்னை, செப்.05-

பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் ரூ.21 கோடியில் தடுப்புச் சுவரோடு நடைபாதை அமைக்கும் அழிவுத் திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் என்றும், இல்லையெனில் பாமக சார்பில் மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும் என்றும் அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் எச்சரித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் நெய்தல் மீட்சி மற்றும் பாதுகாப்பு பணிகள் என்ற பெயரில், 3 கி.மீ நீளத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை அமைக்கும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சதுப்பு நிலத்தை மீட்பதற்கு பதிலாக, அப்பகுதியில் வெள்ளத்தை ஏற்படுத்தி பேரழிவை உருவாக்கும் இத்திட்டத்தை திமுக அரசு தொடங்கியதும், இப்போதைய தவெக அரசு தொடர்ந்து செயல்படுத்துவதும் கண்டிக்கத்தக்கவை.

தமிழ்நாட்டின் கடலோர வளங்களை மீட்டெடுப்பதாகக் கூறி, தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் என்ற புதியத் திட்டத்தை கடந்த 2024-ம் ஆண்டில் திமுக அரசு தொடங்கியது. உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூ.1675 கோடி செலவில் தமிழகத்தின் 14 கடலோர மாவட்டங்களில் 1076 கி.மீ நீளமுள்ள கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தான் இந்தத் திட்டத்தின் நோக்கம் என்று முந்தைய திமுக அரசு அறிவித்தது.

பள்ளிக்கரணை உள்ளிட்ட கடற்கரையோர ஈரநிலங்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பும் இந்தத் திட்டத்தின் முதன்மையான 4 நோக்கங்களில் ஒன்றாக திமுக அரசு அறிவித்தது.

பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை பாதுகாக்க வேண்டும் என்றாலோ, மீட்க வேண்டும் என்றாலோ, அதற்காக உடனடியாக மேற்கொள்ள வேண்டிய இரு நடவடிக்கைகள், ஒரு காலத்தில் 15,000 ஏக்கராக இருந்து இப்போது 1750 ஏக்கராக சுருங்கி விட்ட பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை இயன்றவரை அகற்றுவதும், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் எல்லைகளை வரையறுத்து அறிவிக்கை செய்வதும் தான்.

ஆனால், அதற்கு பதிலாக மீதமுள்ள சதுப்பு நிலத்தையும் அழிக்கும் முயற்சியை திமுக அரசு தொடங்கியது. இந்த பேரழிவுத் திட்டத்திற்காக மட்டும் வனத்துறை மூலம் திமுக அரசு ரூ.21 கோடியை ஒதுக்கியுள்ளது. பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டிய தமிழக அரசு, அதன் பங்குக்கு ஆக்கிரமிப்பு செய்து 3 கி.மீ நீளத்திற்கு 6 அடி உயரத்தில் தடுப்புச் சுவரையும், அதற்கு உட்புறத்தில் 2 கி.மீ நீளத்திற்கு நடைபாதையும் அமைத்து வருகிறது.

தடுப்புச் சுவர், நடைபாதை ஆகிய இரண்டுமே நீரோட்டத்தைத் தடுக்கும் வகையில் அமைக்கப்பட்டிருப்பதால் அந்த பகுதியிலும், சென்னை மாநகரத்தின் பிற பகுதிகளிலும் பெய்யும் மழையால் ஏற்படும் நீர் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு செல்ல முடியாமல் தேங்கி வெள்ளம் ஏற்படும். கடந்த சில நாள்களில் பெய்த லேசான மழைக்கே அப்பகுதியில் மழை நீர் தேங்குவதே இதற்கு சான்றாகும்.




பள்ளிக்கரணையின் ஆகப்பெரும் சிறப்பே மழைக்காலங்களில் பெருக்கெடுத்து வரும் நீரை ஈர்த்துக் கொண்டு, சென்னை மாநகரை வெள்ளத்திலிருந்து பாதுகாப்பதும், வறட்சி காலங்களில் நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் பாதுகாப்பதும் தான். இந்த இரு நோக்கங்களையும் திமுக அரசால் அறிவிக்கப்பட்ட இத்திட்டம் சிதைத்து விடும்.

இப்படி ஒரு திட்டத்தை ஊழல் செய்யும் நோக்கத்துடன் தான் திமுக அரசு அறிவித்தது. ஆனால், ஊழலுக்கு இடம் கொடுக்கும் திட்டங்களையும், மக்களை பாதிக்கும் திட்டங்களையும் ரத்து செய்வதே தங்களின் கொள்கை என்று கூறி, ஐம்பதுக்கும் மேற்பட்ட திட்டங்களை நிறுத்தியும், ரத்து செய்தும் வைத்துள்ள முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அரசு இந்தத் திட்டத்தை மட்டும் தொடர்வது ஏன்?

பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியின் எல்லைக்குட்பட்ட பெரும்பாக்கம் பகுதியில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வசதியாக தனியார் கட்டுமான நிறுவனம் சதுப்பு நிலத்தை ஆக்கிரமித்து சாலை அமைத்தது.

இது தொடர்பாக தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்த பசுமைத் தீர்ப்பாயம், சதுப்பு நிலத்தின் எல்லைகள் வரையறுத்து அறிவிக்கை செய்யப்படாததைக் கண்டித்து, சதுப்பு நில எல்லை அறிவிக்கை செய்யப்படும் வரை ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் கட்டுமானங்களைக் கட்ட இடைக்காலத் தடை விதித்தது. இந்த உண்மைகள் தெரிந்தும் இந்த அழிவுத் திட்டத்தை திமுக அரசு தொடங்கியதும், தவெக அரசு தொடர்வதும் ஏற்க முடியாதவை.

பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதிக்குள் இத்தகைய தடுப்புச் சுவர் மற்றும் நடைபாதை அமைப்பது 2017 ஆம் ஆண்டின் சதுப்புநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகளுக்கு முற்றிலும் எதிரானது ஆகும்.

இத்தகைய தடுப்பு சுவர் அமைக்கப்படுவதால் அப்பகுதியில் வெள்ளம் ஏற்படுவது மட்டுமின்றி, சதுப்பு நிலத்தின் சூழலியல் தன்மையும் பாதிக்கப்படும். அதனால், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் அங்கமாக உள்ள பறவைகள், ஊர்வன வகைகள், நிலநீர் உயிரினங்கள், மீன்கள், மரங்கள், மூலிகைகள், புற்கள், நீர்வாழ் தாவரங்கள், பூச்சிகள், நுண்ணுயிரிகள் உள்ளிட்டவை அழிவைச் சந்திக்கும். அதுமட்டுமின்றி, இனிவரும் காலங்களில் பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதிக்கு வெளிநாட்டு பறவைகள் வலசை வருவது முழுமையாக நின்று விடும்.

கடந்த காலங்களில் பள்ளிக்கரணை சதுப்பு நிலங்களை ஆக்கிரமித்து மத்திய மற்றும் மாநில அரசு அலுவகங்கள் கட்டப்பட்டன. பல்லாவரம் முதல் துரைப்பாக்கம் வரை ரேடியல் சாலை அமைக்கப்பட்டது. இதனால், அப்பகுதிகளில் சதுப்பு நிலத்தின் தன்மை பாதிக்கப்பட்டு, பறவைகளின் வருகை நின்று விட்டது. நெய்தல் மீட்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டால் ஒட்டுமொத்த பள்ளிக்கரணைக்கும் அதே நிலை தான் ஏற்படும்.

சென்னை மாநகரத்தின் இன்றைய முதன்மைத் தேவையும், தமிழக அரசின் இன்றைய முதன்மைக் கடமையும் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை பாதுகாப்பதும் தான். அதை செய்வதற்கு பதிலாக பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை அழிக்கும் வகையிலும், அதையொட்டியுள்ள பகுதிகளில் வெள்ளத்தை ஏற்படுத்தும் வகையிலும் தடுப்புச் சுவர், நடைபாதை பணிகளை மேற்கொள்ளக்கூடாது.

உடனடியாக அந்தப் பணிகளை தமிழக அரசு நிறுத்துவதுடன், இதுவரை மேற்கொள்ளப்பட்ட கட்டுமானங்களை அகற்றி அந்தப் பகுதிகளை ஏற்கெனவே இருந்த இயல்பு நிலைக்கு கொண்டு வர வேண்டும். அதற்கும் மேலாக பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் எல்லைகளை உடனடியாக வரையறை செய்து அறிவிக்கை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இதை செய்யத் தவறினால் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைக் காப்பதற்காக சென்னை மாநகர மக்களைத் திரட்டி மிகப்பெரிய போராட்டத்தை எனது தலைமையில் பாட்டாளி மக்கள் கட்சி நடத்தும் என எச்சரிக்கிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# செப்டம்பர் 5 - ஆசிரியர் தினம்



சுதந்திர இந்தியாவின் முதல் துணைக் குடியரசுத் தலைவரும், இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவரும், சிறந்த தத்துவஞா னியுமான டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் 1962 முதல் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5 ஆம் தேதி இந்தியாவில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.

டாக்டர் ராதாகிருஷ்ணனை அவரது நண்பர்கள் மற்றும் மாணவர்கள் சிலர் அணுகி அவரது பிறந்த நாளைக் (செப்டம்பர் 5 ஆம் தேதி) கொண்டாட அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டனர். அப்போது, "எனது பிறந்த நாளை தனித்தனியாக கொண்டாடுவதற்கு பதிலாக, இந்தியாவில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் மரியாதை செலுத்தும் விதமாக ஆசிரியர் தினமாக கடைப்பிடித்தால் அது எனக்கு பெருமையாகவும், ஆசிரியர்களுக்கு மரியாதை அளிப்பதாகவும் இருக்கும்" என்று கேட்டுக்கொண்டார்.

அதன்படி தான் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 5 ஆம் நாளை மாணவர் சமுதாயம் ஆசிரியர் தினமாக ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் ஒரு திருவிழாவாக கொண்டாடி வருகிறது. ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளை ஏன் ஆசிரியர் தினமாக கொண்டாட வேண்டும் என்பதற்கான விடை இந்தக் கட்டுரையைப் படித்தால் எளிதில் விளங்கும்.

" தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று "

என்ற குறளுக்கேற்ப இந்த உலகில் அவதரித்த சிறந்த மகான்களில் ஒருவர்தான் டாக்டர் ராதாகிருஷ்ணன். ஒரு ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக திகழ்ந்தார். தான் மட்டும் அவ்வாறு இருந்தால் போதாது என்று நினைத்தவர் ஒவ்வொரு ஆசிரியரும் மாணவர்களின் கல்வி அறிவினை போற்ற எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு பல அரிய கருத்துக்களை எடுத்துரைத்தார்.

அவரின் உன்னத வாழ்க்கையைப் பற்றி சற்று விரிவாக தெரிந்து கொள்வோம்.

ஆரம்ப கால வாழ்க்கை:

இன்றைய ஆந்திராவில் உள்ள சர்வபள்ளி தான் இவர் பிறந்த ஊர். ஊர் பெயரிலேயே " சர்வ "என்று இருந்ததால் உலகம் முழுவதையும் தன் அறிவுத் திறனாலும், தத்துவ உரைகளாலும் ஈர்த்தார். அதேபோல் ஊர் பெயரிலேயே பள்ளி என்று இருந்ததால் நன்கு புலமைப் பெற்று ஒரு மிகச் சிறந்த பேராசிரியராக கல்விப்பணியில் முத்திரைப் பதித்தார். செப்டம்பர் 5, 1888 ஆம் ஆண்டு வீராசாமி-சின்னம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். இவரையும் சேர்த்து இவர் குடும்பத்தில் மொத்தம் ஆறு குழந்தைகள் இருந்தனர். இவரது குடும்பம் மிக எளிமையானது.

தனது ஆரம்பக் கல்வியை திருத்தணியில் உள்ள ஒரு கிறிஸ்தவ பள்ளியில் தொடங்கினார் அங்கு படித்ததால் அவருக்கு நல்ல ஆங்கிலப் புலமையும் கிடைத்தது. எப்போதும் புத்தகமும் கையுமாக தான் இருப்பார். கிறிஸ்தவ மதத்தினரின் சேவை மனப்பான்மை, சுயநலமின்மை, மனிதநேயம் இவற்றை அறிந்து கொண்டார். அதே சமயம் இந்து மதத்தின் பெருமைகளையும் நன்கு கற்றறிந்தார்.

பட்டப்படிப்பு:

தன்னுடைய இடைநிலைப் படிப்பை வேலூரில் உள்ள ஊரிஸ் கல்லூரியில் தொடர்ந்தார். அங்கு தனது எஃப்ஏ படிப்பில் (Intermediate Study) கணிதம், உளவியல் மற்றும் வரலாறு உள்ளிட்ட பாடங்களில் மிக அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் படித்து பி.ஏ. தத்துவவியல் பட்டத்தை தன்வசம் ஆக்கினார். பின் எம்.ஏ. பட்டமும் பெற்று புலமைப் பெற்றார்.

தான் படித்த கிறிஸ்தவ கல்வி நிறுவனங்களின் கிறிஸ்தவ போதனைகளும் விவேகானந்தர் சிகாகோவில் நிகழ்த்திய இந்து சமய சொற்பொழிவும் இவரை தத்துவவியல் படிக்கத் தூண்டியது. அதுவே இவரை பின்னாளில் சிறந்த தத்துவ மேதையாகவும் உயர்த்தி அழகுபடுத்தியது. ராதாகிருஷ்ணன் மாணவராய் இருந்தபோது எழுதிய " வேதாந்தத்தின் நீதி " என்ற கட்டுரையில் நிரம்பி இருந்த தத்துவ அறிவையும், ஆங்கில புலமையையும் அறிந்து நீ ஒரு சிறந்த தத்துவ மேதையாய் வருவாய் என பேராசிரியர் ஏ.ஜி. ஹாக் ஆசீர்வதிக்க அவ்வாறே இவரும் வளர்ந்தார்.1912 இல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் ராதாகிருஷ்ணனின் உரைகளை உளவியலின் தேவைகள் என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டது. அப்போது அவர் மாணவராகத் தான் இருந்தார் என்பது கூடுதல் சிறப்பு. மகத்தான மகானாக அவர் வளர்ந்து வந்தார் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

அதன் பின் எல்.டி. படிப்பையும் (Licentiate in Teaching ) கற்றுத் தேர்ந்தார். சமஸ்கிருத நூல்களைக் கற்ற இவர் இந்து மத தத்துவஞானத்தை அதிகம் வளர்த்துக் கொண்டார்.

பேராசிரியர் பணி:

1917 ஆம் ஆண்டு வரை சென்னை மாநிலக் கல்லூரியில் துணை பேராசிரியராகப் பணியாற்றினார். மாணவர்கள் இவரின் வகுப்புகளை புறக்கணிக்காமல் பாடம் கற்றனர். துவக்கத்திலேயே சிறந்த பேராசிரியர் என்ற பெயர் பெற்றார் .அதன் பின் ஆந்திர மாநிலம் ராஜமகேந்திரத்தில் உள்ள கலைக்கல்லூரியில் பணியாற்றினார். ஒப்பற்ற மேதையாய் விளங்கிய விஸ்வேஸ்வரய்யா அவர்களின் வழிகாட்டுதலின் படி மைசூர் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட மைசூர் மகாராஜா கல்லூரியில் 1918 ஆம் ஆண்டு முதல் 1921 வரை பணியாற்றிய போது மாணவர்கள் இவரை ஒரு தெய்வமாகவே போற்றினார். 1921 முதல் 1931 வரை கல்கத்தா பல்கலைக்கழகத்தில் தனது பணியை திறம்பட செய்து எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றார்.

1931 ஆம் ஆண்டு முதல் 1936 வரை ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பொறுப்பு வகித்தார். பேராசிரியராக சில காலமே பணியாற்றி நிலையில் இவருக்கு எவ்வளவு பெரிய பதவி கிடைத்தது. இவரின் அறிவு நுட்பத் திறனுக்கும் சிறந்த ஆசிரியர் பணிக்கும் கிடைத்த மணிமகுடமே ஆகும்.

சிறந்த கல்வியாளரும், பாரத ரத்னா விருது பெற்றவருமான மதன் மோகன் மாளவியா என்னும் சிறந்த தேச பக்தரால் நிறுவப்பட்டதே காசி இந்து பல்கலைக்கழகம். மாணவர்களை சிறந்த பண்பாளராக உருவாக்க அவர் எண்ணினார். தன்னுடைய முதுமை காரணமாக பல்கலைக்கழகப் பணியை நிர்வகிக்க சிறந்தவர் ஒருவர் தேவை என்பதை உணர்ந்தார். ராதாகிருஷ்ணனின் அறிவாற்றலை அறிந்திருந்த காந்தி அவரையே காசி ஹிந்தி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆக்கலாம் என்ற யோசனையைக் கூற மாளவியாவும் அதை ஏற்றுக் கொண்டு 1939 இல் காசி இந்துப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக டாக்டர் ராதாகிருஷ்ணன் நியமித்தார். இதே காலகட்டத்தில் பிற பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகவும் பணியாற்றி வந்தார் ராதாகிருஷ்ணன் என்பது குறிப்பிடத்தக்கது. 1948 வரை துணைவேந்தர் பதவியைத் தொடர்ந்தார். தனது வருமானத்தில் பெரும் பங்கையும், செல்வந்தர்களிடமிருந்து பெற்ற நிதியையும் பயன்படுத்தி காசி இந்து பல்கலைக்கழகத்தை இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக உயர்த்தினார்.

வெளிநாட்டு தூதரக அதிகாரி:

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு அறிவில் சிறந்து விளங்கிவர்களை உயர் பதவிகளில் நியமித்தார். 1949 இல்



மகா பிரபு (9944089151),
ஆசிரியர் - எழுத்தாளர் - கட்டுரையாளர்,
கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளி,
கல்லல், சிவகங்கை மாவட்டம்

டாக்டர் ராதாகிருஷ்ணனை ரஷ்ய தூதரக அதிகாரியாக நியமித்தார். அப்போதைய ரஷ்ய அதிபராக இருந்த ஸ்டாலின் முரட்டு குணம் உடையவர். இந்தியாவைப் பற்றி தவறான எண்ணம் கொண்டவராக இருந்து வந்தார். அது மட்டுமல்ல ரஷ்யப் பத்திரிகைகளிலும் இந்தியாவைப் பற்றி தவறான செய்திகளையே வெளியிட்டனர். ஆனால், ராதாகிருஷ்ணன் ரஷ்யாவின் எண்ணத்தை தனது கருத்துகளால் மாற்றினார். ரஷ்யர்கள் இவரைப் பற்றியும், இந்தியாவைப் பற்றியும் விரைவில் நல்லெண்ணம் பெற்றனர். யாரையும் எளிதில் சந்திக்க விரும்பாத ஸ்டாலின் ராதாகிருஷ்ணனை சந்தித்து உரையாடி இந்திய வரலாறு பற்றி தெரிந்து கொண்டார். ஸ்டாலின் மரணப்படுக்கையில் இருந்த போது கூட ராதாகிருஷ்ணனை சந்தித்து தனது அளவு கடந்த அன்பை வெளிப்படுத்தினார். இவரை சந்தித்த பின்பு தான் ஸ்டாலினுக்கும் இந்தியாவைப் பற்றிய உயர்வான எண்ணம் தோன்றியது. இந்திய ஆன்மீகத்திற்கும், அன்பிற்கும் கட்டுப்பட்ட நாடு என்பதையும் ஆயுத பலத்தை நம்பாத நாடு என்பதையும் புரிந்து கொண்டார் ஸ்டாலின்.

குடியரசுத் தலைவர்:

1952 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின் இந்தியாவின் துணை குடியரசு தலைவரானார் ராதாகிருஷ்ணன். அறிஞர் பெருமக்கள் நிரம்பிய ராஜ்யசபாவை திறம்பட நிர்வகித்தார்.1953 இல் ராதாகிருஷ்ணன் இந்தியாவின் கூட்டு சேரா கொள்கைகளைப் பற்றி உரை நிகழ்த்தினார் அதில் இந்தியா அமெரிக்கா மற்றும் ரஷ்யா என்ற இரண்டு வல்லரசு நாடுகளுடன் கூட்டு சேராமல் அணிசேரா நாடாக விளங்கும் என்றார். 10 ஆண்டுகள் இந்தியத் துணைக் குடியரசுத் தலைவராக இருந்து அந்தப் பதவிக்கு மெருகூட்டினார்.

மே12, 1962 இல் இந்திய குடியரசுத் தலைவராக அரியணை ஏறிய ராதாகிருஷ்ணன் 1967 வரை அப்பதவியில் தொடர்ந்தார். அன்றைய பாரதப் பிரதமர் பல முக்கிய தீர்மானங்களை நிறைவேற்ற குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணனின் ஆலோசனைகளைக் கேட்டுப் பெற்றனர். 1962 இல் இந்திய- சீனப் போர் ஏற்பட்டபோது, போர் நிகழ்ந்த பகுதிகளுக்குச் சென்று வீரர்களிடம் துணிவையும், வீரத்தையும் ஊட்டினார். அதேபோல் 1965 இல் இந்திய - பாகிஸ்தான் போர் ஏற்பட்டபோது ராணுவ பலத்தை அதிகரிக்குமாறு பாரதப் பிரதமரை அறிவுறுத்த அவரும் அவ்வாறே செய்ய இந்தியா போரில் வெற்றி பெற்றது.

இந்தியக் குடியரசு தலைவர் பதவியில் இருந்து விடை பெறும்போது தனது இறுதிக் குடியரசு தின உரையை நிகழ்த்தினார். இந்தியாவில் வாழும் மக்களின் கனவுகள், மதங்கள், சாதிகள் வெவ்வேறானது. ஒவ்வொருடைய கருத்து, நம்பிக்கை, பழக்க வழக்கம் மாறுபட்டது. இருப்பினும் இந்தியர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஒருங்கிணைந்து வாழும் தன்மையை இயற்கையாகவே பெற்றுள்ளனர் என்றார். எனினும் நமக்குள் சிறு சிறு சண்டைகள், கருத்து வேறுபாடுகள் ஏற்படத்தான் செய்கிறது. அதனை முற்றிலும் களைந்து அனைத்து இந்தியர்களும் அனைத்து விஷயங்களையும் எந்தவித முரண்பாடும், முரட்டுக் குணமும் இல்லாமல் முழுமையான இந்தியர்களாக இருக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்

பிற குடியரசு தலைவர்களுக்கு இல்லாத முக்கியத்துவம் ராதாகிருஷ்ணனுக்கு உண்டு.. அதாவது, இவர் ஜவஹர்லால் நேரு, லால்பகதூர் சாஸ்தி மற்றும் இந்திரா காந்தி ஆகிய மூன்று பிரதமர்களின் ஆட்சிக்கு உறுதுணையாக இருந்தார்.

சொற்பொழிவாளர்:

" சான்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பதை மெய்யாகியவர் டாக்டர் ராகிருஷ்ணன்.

எந்த வெளிநாட்டிற்கும் சென்று படிக்கவில்லை. ஆனால், அமெரிக்கா இங்கிலாந்து உள்ளிட்ட பல வெளிநாடு மற்றும் இந்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் திறம்பட சொற்பொழிவாற்றி மாணவர்களின் அறிவு கண்களை டாக்டர் ராதாகிருஷ்ணன் திறந்தார். 1926 ஆம் ஆண்டு லண்டனில் உள்ள ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மான்செஸ்டர் கல்லூரியில் இவர் 'இந்துவின் வாழ்க்கை தர்மம் ' என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு இவரின் முதல் வெளிநாட்டு சொற்பொழிவாகும். 1929 இல் அதே கல்லூரியில் 'ஒப்புமை மதங்கள்' என்ற பெயரில் சொற்பொழிவாற்றினார். 1931 முதல் 1939 வரை ' தி லீக் ஆஃப் நேஷனஸ் கமிட்டி ' என்னும் சர்வதேச அறிஞர்களின் மகா சபையில் உறுப்பினராக இருந்து பலமுறை ஜெனிவாவில் பேருரை நிகழ்த்தினார். மகாத்மா காந்தியின் 70 வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிய தென்னாப்பிரிக்க இந்தியர்கள் ராதாகிருஷ்ணன் அழைத்து அங்கு சொற்பொழிவு நிகழ்த்தும் படி வேண்டுகோள் விடுத்து இவரின் அறிவு ஞானத்தை கேட்டு மகிழ்ந்தனர். இந்தியாவிலிருந்து சீனாவுக்கு அழைக்கப்பட்ட முதல் சிந்தனையாளர் இவர்தான். அங்கு 1944 இல் 12 நாட்கள் 12 தலைப்புகளில் உரை நிகழ்த்தி அனைவரையும் வியக்க வைத்தார் இந்த வித்தகர். 1946 இல் பாரிஸில் நடைபெற்ற யுனெஸ்கோவின் முதல் மாநாட்டில் உரை நிகழ்த்தி இந்தியாவுக்கு மேலும் பெருமை சேர்த்தார்

சுவாமி விவேகானந்தருக்கு அடுத்தபடியாக உலகம் முழுவதும் இந்திய ஆன்மீக தத்துவங்களை உணர்த்திய பெருமை டாக்டர் ராதாகிருஷ்ணனையே சேரும்.

தேசப்பற்று:

காந்திய கொள்கையின் மீது தீவிர பற்றுக் கொண்டும், காந்தியை தன் குருவாகவும் கருதிய டாக்டர் ராதாகிருஷ்ணன் இந்தியா அன்பையும், அமைதியுமே விரும்பும் நாடு. எனவே தான் இந்தியா ஆசிய கண்டத்திலும், உலக அளவிலும் அகிம்சை வழியைப் பின்பற்றும் சிறந்த நாடாக விளங்குகிறது என்றார்.

நேரடி அரசியலில் வெகுநாட்கள் நாட்கள் ஈடுபடாவிட்டாலும், சிறந்த தேசியவாதியாக திகழ்ந்தார். இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள் பலருடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். நேதாஜிக்கும், காந்திஜிக்கும் உறவுப் பாலமாக இருந்தார் . தலைவர்களின் மன வேற்றுமையை தீர்த்து வைக்கும் ஆற்றல் படைத்த ஆசனாக இருந்தார் .சில காலம் ராஜ்யசபா உறுப்பினராகவும் பதவி வகித்தார். சுதேசி கொள்கையிலும் இவருக்கு ஈடுபாடு இருந்தது. பெண்கள் மீது மதிப்பும், மரியாதையையும் வைத்திருந்த இவர் ஆண்-பெண் சம உரிமையைம் ஆதரித்தார்.

சிறந்த எழுத்தாளர்:

டாக்டர் ராதாகிருஷ்ணன் எழுதிய நூல்கள் உலகப்புகழ் பெற்றவை. 1912 இல் இவரது உரைகள் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் சிறிய புத்தகமாக வெளியிடப்பட்டது. 1918 இல் ரவீந்திரநாத் தாகூரின் தத்துவங்களை நூலாக எழுதினார். இந்தியத் தத்துவம் என்ற நூலை இரண்டு பாகங்களாக வெளியிட்டார். . 1932 இல் சர்வதேச அளவில் புகழ்பெற்ற நூலான வாழ்க்கையின் இலட்சிய நோக்கம் என்ற நூலை எழுதினார். 1933 ஆம் ஆண்டு இவர் எழுதிய மதங்களில் கிழக்கும் மேற்கும் (East and West in Religion) என்ன நூல் உலகப் புகழ்பெற்றது. மூன்று ஆண்டுகள் கழித்து இந்துவத்தின் இதயம் (The Heart of Hinduism )எனும் நூலை எழுதினார். 1944 இல் இவர் எழுதிய இந்தியாவும் சீனாவும் என்ற நூல் இந்தியாவுக்கு பெருமையை தேடித் தந்தது. 1939 இல் காந்தியடிகளின் 70 வது பிறந்த நாளை முன்னிட்டு உலகின் பல்வேறு அறிஞர்கள் இவரைப் பற்றி எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து மகாத்மா காந்தி எனும் தலைப்பில் நூலாக வெளியிட்டார்.

கல்கி அல்லது வருங்கால தலைமுறை, இந்திய மாமனிதர்கள், மாறும் உலகின் மதம் போன்ற சிறந்த நூல்களை எழுதியதோடு, இந்தியப் பத்திரிகைகளில் ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார். இவரின் சிறந்த எழுத்தாற்றலை அங்கீகரிக்கும் பொருட்டு சாகித்ய அகாடமியின் தலைமை பொறுப்பை ஏற்கும் வாய்ப்பு 1964 இல் இவரைத் தேடி வந்தது.

சிறந்த ஆசிரியர்:

ஆன்மீகக் கல்வியை படிப்பதன் மூலம் நல்ல சமுதாயமும் நாகரிகமான மனிதர்களும் உருவாக முடியும் என்று தீர்க்கமாக நம்பினார். தத்துவக் கல்வி ஒரு மனிதனை உயர்ந்த இடத்திற்கு அழைத்துச் செல்கிறது என்பதை மாணவர்களிடம் எடுத்துரைத்தார் . சுதந்திர இந்தியாவில் எந்த மாதிரி கல்வி தேவை என்பதை கருத்தில் கொண்டு அதற்கேற்ப பல்வேறு கருத்துகளையும் எடுத்துரைத்தார். கல்வியில் சிறந்த வழிமுறைகளையும் புகுத்தினார். பல சிக்கலான கருத்துக்களைக் கூட மாணவரிடம் மிக எளிமையாக கூறி புரிய வைத்தார். பாடம் நடத்தும் போது இவரின் நகைச்சுவை உணர்வும், அறிவாற்றல் பண்பும் மாணவர்களை வெகுவாக வசீகரித்தது. எத்தனை பெரிய பதவிகளை வகித்தாலும் எப்போதும் தான் ஒரு பேராசியர் என்ற எண்ணம் கொண்டுவராக இருந்தார்.

விருதுகள்:

1950 இல் ' கோதே பிளாக்கொட்'

1957 இல் ' மாஸ்டர் ஆஃப் விஸ்டம் '

1964 இல் ' போப் விருது '

உள்ளிட்ட ஏராளமான விருதுகள் டாக்டர். ராதாகிருஷ்ணனின் அற்புதமான சேவையை பாராட்டி வழங்கப்பட்டது. இந்து சமயத்திற்கு இவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி ' டெம்பிளிஷன் விருது ' வழங்கப்பட்டது. உலகின் பல நாடுகளின் பல்கலைக்கழகங்களும் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கி அந்த விருதிற்கு அழகு சேர்த்தன. 17 டாக்டர் பட்டங்களைப் பெற்ற முதல் இந்தியரும் இவர்தான்.

இந்தியாவின் தலைசிறந்த விருதான 'பாரத் ரத்னா விருது ' இவருக்கு 1954 இல் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஆசிரியர் தினம்:

இந்தியா முன்னேற வேண்டும் வளர்ச்சி பெற வேண்டும் என்று சுதந்திரத்திற்கு முன்பிருந்தே வேண்டுகோள் விடுத்து அதற்கு தனது செயல்களிலும் முழு வடிவம் கொடுத்தவர்தான் டாக்டர் ராதாகிருஷ்ணன்.

" முயற்சித்தால் முடியாதது எதுவுமில்லை
முயற்சி செய்பவரே வெற்றி பெறுவார் "

என்பதை இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டிய மாமேதைகளில் ஒருவரே டாக்டர் கிருஷ்ணன்.

ஒரு ஆசிரியராக, பேராசிரியராக போதனைகளை வகுப்பறைக்குள் மட்டும் கொண்டு செல்லாமல் உலகம் முழுவதும் அனைத்து தரப்பு மக்களிடமும் கொண்டு சேர்த்த பெருமை டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு உண்டு.

பல நூல்களை எழுதிய சிறந்த எழுத்தாளர், உலகம் போற்றும் சிந்தனையாளர், தத்துவம் மூலம் தன் கருத்துக்களை மாணவர்களின் மனதில் வேரூன்ற செய்த தத்துவஞானி, பல பட்டங்கள், பல விருதுகள் பெற்றவர் டாக்டர் ராதாகிருஷ்ணன்.

மாணவர்கள் மனதில் ஒரு மிகச்சிறந்த ஆசிரியராக போற்றப்பட்டவர் ராதாகிருஷ்ணன். தான் வாழ்ந்த காலம் மட்டும ல்லாமல் அதன் பிறகும் அவருடைய ஆசிரியர் பணியானது இன்றைய இளைய சமுதாயத்தினராலும் போற்றக் கூடியதாக இருக்கிறது தன்னுடைய பிறந்த நாளை ஆசிரியர்களை போற்றும் விதமாக ஆசிரியர் தினமாக அவர்கள் வேண்டுகோள் விடுத்தது ஆசிரியர் சமுதாயத்தின் மீது அவர் வைத்திருந்த நன்மதிப்பை எடுத்துக்காட்டுகிறது.

ஒரு மாணவனை அவன் யார் என்று உணர வைக்கக்கூடிய பாங்கினையும், சமுதாயத்தை நோக்கிய அவனது பார்வையையும் கொடுக்கக்கூடிய ஒரு மாபெரும் சக்தியே ஆசிரியர் சமுதாயமாகும். ஒரு நாடு தொழில்துறையிலும், பொருளாதாரத்திலும் முன்னேறினாலும் கல்வியின் முன்னேறினால் மட்டுமே அது சிறந்த நாடாக போற்றப்படும். தன் தாய் திருநாட்டை கல்வியில் சிறந்த நாடாக முயற்சி செய்து வரும் ஆசிரியர் சமுதாயத்தை போற்றும் விதமாக டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்த நாளான இந்நாளை ஆசிரியர் தினமாக கொண்டாடுவது மிகச் சிறப்புடையதுதானே !

"ஆசிரியர்களைப் போற்றுவோம்
மனித சமுதாயத்தை உயர்த்துவோம்"

## தேனி மாவட்டத்தில் வேளாண் விளைப் பொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க நியாய விலையில் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு குறைந்த விலையில் வெங்காயம் விற்பனை செய்வதை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு

தேனி, செப்.05-

தேனி வேளாண் விளை பொருள் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க நியாயவிலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு குறைந்த விலை(ரூ.35)-யில் வெங்காயம் விற்பனை செய்யப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலம் பொதுமக்களுக்கு தரமான வெங்காயம் குறைந்த விலையில் தடையின்றிக் கிடைக்கும்வகையில் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கை மேற்கொ ளளப்பட்டுள்ளது. வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருளான வெங்காயத்தின் விலை உயர்ந்து வருவதைக் கட்டுப்படுத்தவும், ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்காக, தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையம் (NAFED) மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு (NCCF) ஆகியவற்றின் மூலம் சுமார் 25 மெட்ரிக் டன் வெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டு, தேனி மாவட்டத்தில் இன்று முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் உள்ள 140 நகரப்புற நியாயவிலைக் கடைகளுக்கு வெங்காயம் கிலோ ரூ.35/- என்ற விலையில் ஒரு குடும்ப அட்டைதாரருக்கு ஒரு கிலோ வீதம் மாவட்டத்தில் மொத்தம் 159960 குடும்ப அட்டைதாரர்களுக்கு விற்பனை செய்யப்பட உள்ளது. மேலும், அங்காடிகளில் இறக்கப்பட்டுள்ள வெங்காயத்தின் தரத்தினை பரிசோதித்து நல்ல நிலையில் உள்ள வெங்காயத்தை விற்பனை செய்ய ஏதுவாக கூட்டுறவு சார்பதிவா ளர்கள் தலைமையில் 6 குழுக்கள் அமைக்கப்பட்டு, தரப்பரிசோதனை மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், அரசின் நிபந்தனைகளுக்குட்பட்டு, பொதுமக்களுக்கு தரமான வெங்காயம் குறைந்த விலையில் விற்பனை செய்வதைக் கண்காணித்து அறிக்கையை சமர்ப்பித்திட 5 அங்காடிகளுக்கு ஒரு அலுவலர் என்ற முறையில் 28 அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் நர்மதா, மாவட்ட வழங்கல் அலுவலர்.நல்லையா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



# மேலநெட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியர் தின விழா

மானாமதுரை, செப்.04–

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் மேலநெட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் நேற்று ஆசிரியர் தின விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவையொட்டி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மகிழ் முற்றத்தின் தகவல் தொடர்பு அமைச்சர் விகாஷினி வரவேற்புரை வழங்கினார். முல்லை திணையின் தலைவர் சந்தியா ஆசிரியர்களை வாழ்த்திப் பேசினார்.





சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தமிழ்நேயன் வழிகாட்டுதலின்படி ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. தொடர்ந்து சுகாதாரத்துறை அமைச்சர் கதிர் தலைமையில் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி ஆசிரியர்கள் பெருமைப்படுத்தப்பட்டனர்.

இறுதியாக பாலை திணையின் தலைவர் ரஞ்சனி நன்றியுரை வழங்கினார். விழா இனிதே நிறைவுற்றது.





■ மதுரை மாவட்டம் ,மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் "தாய்மாமன் தங்க மோதிரம்" திட்டத்தை செயல்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா விரிவான ஆய்வு மேற்கொண்டார்.இத்திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு தேவையான வசதிகள், மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள், அரசிடமிருந்து வரப்பெறும் தங்க மோதிரங்களை பாதுகாப்பாகப் பெற்று, உரிய முறையில் பாதுகாத்து வைப்பதற்கான நடைமுறைகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு கொண்டார். அரசு இராசாசி மருத்துவமனை முதல்வர் அருள் சுந்தரேஷ் குமார் உடனிருந்தார்.

# ஆயுதங்கள், போதை மாத்திரைகள் வைத்திருந்த 4 பேர் கைது

மதுரை, செப்.05–

மதுரை மாநகர் சிந்தாமணி காவல் நிலையப் பகுதியில், போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவ்வழியாக வந்த சிலர், போலீசாரைக் கண்டதும் தப்பி ஓட முயன்றனர். அவர்களை போலீசார் சுற்றிவளைத்து பிடித்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில், அவர்கள் கண்ணன் காலனியைச் சேர்ந்த பால்பாண்டி (22), களத்துப்பொட்டலைச் சேர்ந்த காளிதாஸ் (23), சுப்பிரமணியபுரத்தைச் சேர்ந்த கோகுலகிருஷ்ணன் (26), கீரைத்துறையைச் சேர்ந்த விக்னேஷ் (23) மற்றும் 17 வயது சிறுவன் என்பது தெரியவந்தது.

இதில் பால்பாண்டி மீது ஏற்கனவே குற்ற வழக்குகள் இருப்பதும், பல்வேறு வழக்குகளில் தொடர்புடையவர் என்பதும் தெரியவந்தது. இதையடுத்து அவர்களிடம் இருந்த ஆயுதங்கள் மற்றும் போதை மாத்திரைகளை போலீசார் பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக 4 பேரை கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு அனுப்பினர். 17 வயது சிறுவனை அரசு கூர்நோக்கு இல்ல பாதுகாப்பில் வைக்க போலீசார் அனுப்பி வைத்தனர்.



# உதகை இந்துநகர் நியாய விலைக் கடையில் குறைந்த விலையில் வெங்காயம் விற்பனை செய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்தார்

நீலகிரி, செப்.05–

நீலகிரி மாவட்டம், உதகை ஹெச்.பி.எப் இந்து நகர் நியா ய விலைக் கடையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு குறைந்த விலையில் வெங்காயம் விற்பனை செய்யும் பணியினை, மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, தமிழ்நாடு முழுவதும் நிலவி வரும் வெங்காய விலை உயர்வினை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் குறைந்த விலையில் நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 கிலோ வெங்காயம் ரூ.35–க்கு விற்பனை செய்யும் பணி தமிழகம் முழுவதும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், உதகை ஹெச்.பி. எப் இந்து நகர் நியாய விலைக் கடையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு குறைந்த விலையில் வெங்காயம் விற்பனை செய்யும் பணியினை, மாவட்ட ஆட்சித் தலைவர் துவக்கி வைத்தார். மேலும், நீலகிரி மாவட்ட கூட்டுறவு துறை மூலமாக நகர்புறங்களில் செயல்படும் 124 நியாயவி லை கடைகளில் மொத்தம் சுமார் 15,000 எண்ணிக்கையிலான குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில் 15 மெட்ரிக் டன் வெங்காயம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் . வாசுகி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் மரு.சித்ரா, பொது விநியோக திட்ட துணைப் பதிவாளர் திரு.க மல்சேட், நீலகிரி மாவட்ட நுகர்வோர் மொத்த விற்பனை பண்டக சாலையின் துணைப்பதிவாளர் திரு. அய்யனார், நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் துணை ப்பதிவாளர் .ராஜா, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.சரவணன், உதகை வட்டாட்சியர் சதீஷ்வர நாயக், நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியதின் செயலாட்சியர் .கௌரிசங்கர் மற்றும் அரசு துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்ட கூடுதல் ஆட்சியர் அலுவலகத்தில் வரும் செப்டம்பர் 18 ஆம்தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நீலகிரி, செப்.05–

நீலகிரி மாவட்டத்தில் 18.09.2026 அன்று காலை 11.00 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் உதகமண்டலம், பிங்கர்போஸ்ட் பகுதியில் உள்ள மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே விவசாயிகள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் ஏதேனும் இருப்பின், அக்கோரிக்கைகளை 07.09.2026–க்குள் தோட்டக்கலை இணை இயக்குநர். தபால்பெட்டி எண்–72, உதகை–643001 என்ற அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அல்லது idhootv@gmailcom என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் மற்றும் இம்மாவட்ட அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொள்வதால், விவசாயிகள் விவசாயம் சம்மந்தமான குறைகள் இருப்பின். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் . லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.





# டி.ஜெ.எஸ்.கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நல்லாசிரியர் விருது வழங்கும் விழா

திருவள்ளூர், செப்.05–

திருவள்ளூர் மாவட்டம் கும்முடிபூண்டி அருகே பெருவாயலில் உள்ள T.J.S. கல்வி மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நல்லாசிரியர் விருது வழங்கும் விழா கும்மிடிப்பூண்டி ரோட்ரி சங்கம், டி.ஜெ.எஸ் ரோட்ராக்ட் சங்கம், கல்பத்ரு அறக்கட்டளை இனைந்து நடத்தினார்கள் இந்நிகழ்வில் டி.ஜெ.எஸ். கல்வி குழும தலைவரும் கும்முடிப்பூண்டி திமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பிருமான டி.ஜெ.கோவிந்த ராஜன் கலந்து கொண்டு விருதுகளை வழங்கி கௌவுரவித்தார்.

மேலும் இவ்விழாவில் நிர்வாக இயக்குனர் டி.ஜெ. ஆறுமுகம் இயக்குனர் தமிழரசன் மாவட்ட கல்வி அலுவலர் ஜயப்பன் கல்பத்ரு அறக்கட்டளை நிறுவனர் கல்பனா கல்லூரி முதல்வர் ஸ்ரீலட்சுமிபதி ஆரோக்கியம் ஜம்போ பேக் நிறுவன துணைதலைவர் பால்ஆரோக்கியம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தனர் இந்நிகழ்வில் சிறந்து பணியாற்றிய ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது

# ஸ்ரீ ருக்மாபாய் சமேத ஸ்ரீ பண்டரிநாத ஸ்வாமி கோயில் மகா கும்பாபிஷேக விழா




கிருஷ்ணகிரி, செப்.05–


கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ ருக்மாபாய் சமேத ஸ்ரீ பண்டரிநாத ஸ்வாமி புதினை மடம் கோயிலில் மகா கும்பாபிஷேக விழா வரும் செப். 7–ம் தேதி நடைபெறுகிறது.

விழாவையொட்டி காலை 7 மணிக்கு வேத திவ்ய பிரபந்த சேவாகாலம், தவார பூஜை உள்ளிட்ட சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். காலை 9.15 மணிக்கு மேல் ஸ்ரீ ருக்மாபாய் சமேத ஸ்ரீ பண்டரிநாத ஸ்வாமி மகா சம்ப்ரோக்ஷணம் (மகா கும்பாபிஷேகம்) நடைபெறுகிறது.

தொடர்ந்து காலை 11 மணிக்கு மகா ஹாரத்தி, 11.30 மணிக்கு தீர்த்தப் பிரசாதம் வழங்குதல், பகல் 12 மணிக்கு திருக்கோயில் வளாகத்தில் அன்னதானம் நடைபெறும். மாலை 6 மணிக்கு ஸ்ரீ ருக்மாபாய் சமேத ஸ்ரீ பண்டரிநாத ஸ்வாமிக்கு திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

விழாவில் பக்தர்கள் திரளாக பங்கேற்று சுவாமி தரிசனம் செய்து அருள் பெறுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# பழனி அருகே சாதியின் பெயரைச் சொல்லி தாக்கிய சம்பவம் விவசாயி மருத்துவமனையில் அனுமதி



திண்டுக்கல், செப்.05–

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த கரிகாரன் புதூர் பகுதியைச் சேர்ந்த கணேசன் என்பவருக்கு சொந்தமான தென்னந் தோப்பில்

பாலசமுத்திரம் பகுதியைச் சேர்ந்த சீதாராமன் உட்பட 25க்கும் மேற்பட்ட நபர்கள் அத்துமீறி தேங்காய் வெட்ட தொடங்கியுள்ளனர்.

இந்நிகழ்வை கேள்விப்பட்டு விரைந்து வந்த கணேசன் மற்றும் அவரது மனைவி திவ்யா ஆகிய இருவரும் தேங்காய் வெட்டக்கூடாது எனது தோட்டம் என்று கூறிய நிலையில் பட்டியல் சமூகம் என்பதால் கணேசனை சாதியின் பெயரைச் சொல்லி மிகவும் அருவருக்கத் தக்க வார்த்தைகளை சீதாராமன் மற்றும் அவருடன் வந்த நபர்கள் பேசியுள்ளனர்தொடர்ந்து இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் தேங்காயை வெட்டி டிராக்டரில் ஏற்றி கொண்டு செல்லும் பொழுது டிராக்டர் முன்னே உட்கார்ந்து மறியல் செய்ய முயன்றால்

தொடர்ந்து டிராக்டரை அவர்கள் மீது ஏற்ற முயற்சி செய்த நிலையில் இருவரும் தாக்கியுள்ளனர்.

மேலும் இருவரும் சரமாரியாக தாக்கப்பட்டு கணேசன் கையில் சீதராமன் என்பவர் கத்தியால் கிழித்துள்ளார்.

தொடர்ந்து இரத்த காயத்துடன் காணப்பட்ட கணேசன் மற்றும் சரமாரியாக தாக்கப்பட்ட அவரது மனைவி திவ்யா ஆகிய இருவரும் சிகிச்சைக்காக பழனி மாவட்ட தலைமை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சாதியின் பெயரால் அத்துமீறி சரமாரியாக தாக்கி கொலை முயற்சியில் ஈடுபட்ட சீதாராமன் மற்றும்அவருடன் வந்த அனைவரும்மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து கைது செய்ய வேண்டும் என கணேசன் தெரிவித்து வருகிறார்...

# ஆசிரியர் தின விழாவில் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள்

கிருஷ்ணகிரி, செப்.05–

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

விழாவிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியை நளினி தலைமை வகித்தார். பள்ளியின் மேலாண்மைக் குழுத் தலைவர் பயாஸ் பாஷா, பொருளாளர் மோகன் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆசிரியர் தினத்தின் சிறப்பையும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பையும் எடுத்துரைக்கும் வகையில் மாணவிகளுக்காக பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்த ப்பட்டன. இதில் மா ணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது திறமை களை வெளிப்படுத்தினர்.

குறிப்பாக பரதநாட்டியம், சமூக விழிப்புணர்வு நாடகம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளை மாணவி கள் சிறப்பாக நிகழ்த்திக் காட்டினர். சமூகத்தில் நிலவும் முக்கிய




பிரச்னைகள், கல்வியின் அவசியம், ஆசிரியர்களின் பங்கு உள்ளிட்ட கருத்துகளை மையமாகக் கொண்டு மாணவிகள் நடத்திய விழிப்புணர்வு நாடகம் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது.

மேலும், மாணவிகளின் நடனம் மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் விழாவில் பங்கேற்ற அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தன. மாணவிகளின் கலைத் திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன.

நிகழ்ச்சிகளில் சிறப்பாகப் பங்கேற்று வெற்றி பெற்ற அனைத்து மாணவிகளுக்கும் பள்ளியின் தலைமை ஆசிரியை நளினி மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் சார்பில் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மேலும் பள்ளி யின் அனைத்து ஆசிரியர்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டது.

ஆசிரியர் தின விழா, மாணவிகளின் கல்வித் திறனுடன் அவர்களது கலை மற்று ம் சமூக விழிப்புணர்வுத் திறன்க ளையும் வெளிப்படுத்தும் வகையில் சிறப்பாக அமைந்தது.

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் நாளை 6-ம் தேதி நடைபெறும், மாவட்ட செயலாளர் முன்னாள் எம்எல்ஏ மதியழகன் அறிக்கை

கிருஷ்ணகிரி, செப். 05–



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் வரும் 6–ம் தேதி காலை 10.30 மணிக்கு கிருஷ்ணகிரி குறிஞ்சி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

மாவட்டக் கழக அவைத் தலைவர் நாகராஜ் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், தலைமைக் கழக பிரதிநிதிகளாக நியமிக்க ப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.ராணி ஆகியோர் பங்கேற்று, கழக மறுசீரமைப்பு மற்றும் அமைப்புத் தேர்தல் பணிகள் தொடர்பான வழிமுறைகள் குறித்து ஆலோசனை வழங்க உள்ளனர்.

மேலும், செப்டம்பர் 15–ம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா மற்றும் முப்பெரும் விழாவை சிறப்பாக நடத்துவது, கழக ஆக்கப்பணிகளை தீவிரப்படுத்துவது குறித்தும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது. கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என மாவட்டச் செயலாளர் தே.மதியழகன், Ex.MLA கேட்டுக்கொண்டுள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161